# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-45000032, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com

சுற்றறிக்கை எண்:125:2022 நாள்: 03.09.2022

அன்பார்ந்த தோழர்களே,

## வங்கியின் ஊழியர் நலத் திட்டங்கள்

அரசின் வழிகாட்டுதலின்படி, நமது வங்கி, நிகர லாபத்தில் 3 சதவீத தொகையை ஊழியர் நலனுக்காக செலவிட்டு வருகிறது. இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் ஊழியர் நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. சில புதிய திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 1. கேண்டீன் மானியம்:

ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு ஊழியருக்கும் ரூ.200/- சுய அறிவிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும்.

### 2. கர்ப்பகால பரிசோதனை:

பெண் ஊழியர்கள் தங்கள் கர்ப்பகாலத்தில் செய்துகொள்ளும் Antenatel Check-up என்ற பரிசோதனைக்கு, பணியில் இருக்கும் காலகட்டத்தில், இரண்டு முறை ரூ.5000/- வீதம் பெற்றுக்கொள்ளாலாம்.

### 3. பிராந்திய அலுவலகங்களில் மருத்துவ வசதி:

எல்லா பிராந்திய அலுவலகங்களிலும் ஒரு பொது மருத்துவரும், ஒரு இதய நோய் சிறப்பு மருத்துவரும், ஒரு ஆயுர்வேத மருத்துவரும் நியமிக்கப்பட்டு, ஊழியர்களுக்கும், ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும் சிகிச்சை வழங்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். பொது மருத்துவர் எல்லா வேலை நாட்களிலும், சிறப்பு மருத்துவர் வாரத்தில் இரண்டு நாட்களும் பணியாற்றுவார்கள். சாதாரணமாக மருத்துவ மையம் மாலை 3.30 முதல் 5 மணி வரை செயல்படும். சாதாரண மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும்.

சென்னை வடக்கு பிராந்தியம் தவிர, பிற பிராந்திய அலுவலகங்களில் இன்னும் இந்த வசதி ஏற்படுத்தப்படவில்லை. எனவே, நமது நிர்வாகிகள் முயற்சி மேற்கொண்டு, இந்த வசதியை விரைவில் ஏற்படுத்தவேண்டும்.

4. <u>சம்பளம் இல்லாதோருக்கு உதவித்தொகை:</u>

சில ஊழியர்கள், நீண்டகால நோயின் காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு ஊதிய இழப்புக்கு ஆளாகும்போது, அவர்களுக்கு மாதம் ரூ.5000/- வீதம் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும்.

5. <u>துணைநிலை ஊழியர் குழந்தைகளுக்கு கல்வி உதவி:</u>

கல்லூரியில் படிக்கும் துணைநிலை ஊழியர்களின் இரண்டு குழந்தைகளுக்கு, கல்லூரிக் கல்விக்கு ஆகும் செலவில் 50%, அதிகபட்சமாக ரூ.10.000/- ஆண்டு தோரும் வழங்கப்படும்.

6. <u>ஊழியர் குழந்தைகளுக்கு கல்வி உதவி:</u>

பள்ளிக் கல்வி பெறும் ஒரு குழந்தைக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.2500/- வரை வழங்கப்படும்.

7. <u>கல்லூரியில் பயிலும் குழந்தைகளுக்கு உதவி :</u>

கல்லூரியில் பயிலும் ஒரு குழந்தைக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.4000/- வரை வழங்கப்படும்.

8. <u>கல்வி ஊக்கத்தொகை:</u>

10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில், +1, +2 படிப்பிற்கும், கல்லூரிப் படிப்பிற்கும் ஊக்கத்தொகை வழங்கப்படும். +1, +2 படிப்பிற்கு மாதம் ரூ.500/-ம், கல்லூரிப் படிப்பிற்கு மாதம் ரூ.600/-ம், விடுதியில் தங்கிப் படிக்கும் கல்லூரிப் படிப்பிற்கு மாதம் ரூ.800/-ம் வழங்கப்படும். இந்த ஊக்கத்தொகை பெறுவதற்கு, குழந்தைகள் குறிப்பிட்ட மதிப்பெண்கள் பெறவேண்டும்.

9. <u>முதல் மதிப்பெண் பெறும் குழந்தைகளுக்கு ஊக்கத்தொகை:</u>

பள்ளியில் பயிலும் குழந்தைகள் வகுப்பில் முதலிடம் பெற்றால், வருடத்தில் ஒரு முறை ரூ.3000/- வழங்கப்படும்.

10. <u>ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு மருத்துவ உதவி (UBIREMAS) :</u>

வங்கிப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் ஒருமுறை ரூ.5,000/-, எழுத்தர்கள் ரூ.3,000/-, துணைநிலை ஊழியர்கள் ரூ.2,000/-, 1986க்கு முன் ஓய்வு பெற்றவர்கள் ரூ.1,000/- செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் ஊழியருக்கும், அவரது துணைவியாருக்கும் அதிக பட்சமாக ரூ.1,50,000/- வரை செலவுத் தொகை ஈடுகட்டப்படும். மேலும் ஒவ்வொரு ஆண்டும், மருத்துவ பரிசோதனைக்காக ரூ.2,000/- பெற்றுக்கொள்ளலாம்.

ஓய்வு பெற்ற ஊழியர்கள் ஆறு மாத காலத்திற்குள் இத்திட்டத்தில் சேரவேண்டும். **தற்போது வங்கிகள் இணைபின் காரணமாக இதுவரை இத்திட்டத்தில் சேராத அனைவருக்கும் மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.** ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு இந்த தகவலை தெரிவித்து, அவர்கள் பயன் பெற்றிட உதவும்படி கேட்டுக்கொள்கிறோம்.

11. <u>1986க்கு முன்பாக ஓய்வு பெற்றவர்களுக்கு:</u>

1986க்கு முன்பாக ஓய்வு பெற்றவர்கள் கருணைத் தொகையாக ரூ.350/-ம் பஞ்சப்படியும் பெற்றுவருகின்றனர். அவர்கள் அனைவருக்கும் 01.07.2022 முதல் ரூ.10,000/- கூடுதலாக வழங்கப்படும்.

12. <u>விடுமுறை இல்லங்கள்:</u>

வங்கி தற்சமயம் திருப்பதி, ஷீரிடி, தீத்தல், ஊட்டி, முசௌரி, மாத்தேரன், மனாலி, கண்டாலா, கட்ரா, குருவாயூர், பெங்களூரு, அலிபாக் ஆகிய இடங்களில் விடுமுறை இல்லங்களை நடத்தி வருகிறது. புதிதாக, அமிர்தசரஸ், சிம்லா, வாரணாசி, கோவா, ஹரித்துவார், கொச்சி, பூரி, தேவ்கார், மூனார், கேங்க்டாக், புது தில்லி ஆகிய இடங்களில் விடுமுறை இல்லங்கள் துவக்கப்படவுள்ளன.

ஊழியர்களும், விடுமுறை தினங்கள் இல்லாத நாட்களில் ஓய்வு பெற்ற ஊழியர்களும் இவற்றில் தங்கலாம். இதற்கான வாடகை, நாள் ஒன்றுக்கு ரூ.200/- மட்டுமே. அதிக பட்சமாக 4 தினங்கள் தங்கலாம்.

13. <u>தற்காலிக இல்லங்கள் (Transit Quarters)</u>

சென்னை, மும்பை, கொல்கத்தா, புது தில்லி ஆகிய இடங்களில் மருத்துவ உதவி பெறும் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தாரும், ஓய்வு பெற்ற ஊழியர்களும் நாள் ஒன்றுக்கு ரூ.10/- வாடகை செலுத்தி, அதிகபட்சமாக 15 நாட்கள் வீதம், வருடம் இருமுறை தங்கலாம்.

14. <u>மாற்றுத்திறனாளிக்கு (PWD) உதவி:</u>

மாற்றுத்திறனாளிகளாகவுள்ள ஊழியர்களுக்கு, அவர்களுக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்காக வருடம் ஒன்றுக்கு ரூ.3000/- வழங்கப்படும்.

15. <u>மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு (PWD) உதவி:</u>

மாற்றுத்திறனாளிகளாகவுள்ள குழந்தைகளுக்கு, அவர்களுக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்காக வருடம் ஒன்றுக்கு ரூ.2000/- வழங்கப்படும்.

16. <u>சிறப்புத் தகுதியுள்ள குழந்தைகளுக்கு உதவி:</u>

விளையாட்டு, கலாச்சாரம் ஆகியவற்றில் அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெறும் ஊழியர்களின் குழந்தைகளுக்கு ரூ.7500/- முதல் ரூ.25000/- வரை வழங்கப்படும்.

17. மருத்துவ காப்பீட்டு உதவி:


1986க்கு முன் ஓய்வு பெற்றவர்கள், குடும்ப ஓய்வுதியமாக ரூ.10,000/-க்கும் குறைவாக பெறுபவர்களுக்கு, அவர்கள் செலுத்தும் மருத்துவ காப்பீட்டு பிரிமியம் தொகையில் 50% வங்கியால் வழங்கப்படும்.

18. கண் கண்ணாடிக்கு உதவி:

கண் கண்ணாடி அணிந்துள்ள 35 வயது முதல் 40 வயது வரை உள்ள ஊழியர்களுக்கு ரூ.2000/-, 40 முதல் 50 வரையுள்ள ஊழியர்களுக்கு ரூ.2500/-ம், 50 முதல் 60 வரையுள்ள ஊழியர்களுக்கு ரூ.3000/-மும் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை புதிய கண்ணாடி வாங்குவதற்கு வழங்கப்படும்.

இந்தச் சுற்றறிக்கை, குறிப்பாக துணைநிலை ஊழியர்களின் புரிதலுக்காக வெளியிடப்படுகிறது. மேலும் விபரங்கள் தேவைப்படும் தோழர்கள், அருகிலுள்ள சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்களை அணுகவும்.

தோழமை வாழ்த்துகளுடன்,



(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்